ஏறாவூர்பற்று பிரதேச சபை-2013

---

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2014 ஏப்ரல் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 18 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 04 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து ஏறாவூர்பற்று பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம்பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடு

மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா.22,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்துக்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.3. பெறவேண்டிய கணக்குகள்

------------------------------------------

1990-2002 ஆம் காலப்பகுதியில் பதவியை விட்டுச்சென்ற ஏழு ஊழியர்களின்கடன் நிலுவைகள்ரூபா.463,466தொகையை இளைப்பாற்றுப் பணிக்கொடை அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக அறவிடவேண்டியவைகளாக ஏடுகளில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.4. கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

நிதிக்கூற்றுகளில்காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு இனம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| காணிகளும்,கட்டிடங்களும். | 168,002,285 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித்தொகுதிகளும்,இயந்திரங்களும். | 1,625,491 | நிலையான சொத்துப் பதிவேடுகள்,சொத்துக்கள் பற்றிய விபரமான பட்டியல் மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| மோட்டார்வாகனங்களும், வண்டிகளும். | 15,150 | |
| தளபாடங்களும், பொருத்துக்களும். | 3,087,250 | |
| நூல் நிலைய புத்தகங்கள். | 3,926,793 | |

1.3.5. சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன்இணங்காமை

-------------------------------------------------------------------------------------

பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுக்கான தொடர்பு | விடயங்கள் |
|---|---|
| (அ) 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 134 (1) | பிரதேச சபை எல்லைப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனம் கண்டு அவற்றின் ஆண்டு பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள்.

| | |
|---|---|
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம்,களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை நான்குஉத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

2. நிதி மீளாய்வு

---------------------

2.1. நிதி விளைவுகள்

--------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2013திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானமீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம்ரூபா.14,212,706ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.2,312,781ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.11,899,925 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

## 2.2. வருமான முகாமைத்துவம்

### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமானவிடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 2,025000 | 2,550 | 2,022,450 |
| உரிமைக்கட்டணங்கள் | 1,220,000 | 1,147,120 | 72,880 |
| பற்றாணைச்செலவுகள் | 10,005,000 | 8,916,670 | 1,088,330 |
| அரசிறை வருமானம் | 21,600,000 | 11,787,783 | 9,812,217 |

### 2.2.2. வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது வீதவரிகள் அறவீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆண்டுப் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததினால் சபை அண்ணளவாக ரூபா.1,000,000 வருடத்திற்கு வருமானத்தை இழந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1. இனம் காணப்பட்ட நட்டங்கள்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(அ) மீளாய்வாண்டில் சபையினால் வழங்கப்பட்டிருந்த 13 வீதி எல்லைச் சான்றிதழுக்கான வருமானம் ரூபா. 16,000 சபையின் கணக்கிற்குகொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுச்சந்தைக்குள் இடுவதற்கானகிறவலுக்கான கூறு விலை கோரப்பட்ட போது ஒரு மீற்றர் கியூப்பிற்கு ரூபா.589 படிமதிப்பிடப்பட்டிருந்து.ஆனால் கொடுப்பனவின் போது மீற்றர் கியூப்பிற்கு ரூபா.950 படி வழங்கப்படடிருந்தது. எனவே, 38 லோட்டுக்கும் மேலதிகமாக ரூபா.13,718கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------

உறுகாமத்தில் ரூபா.5மில்லியன் செலவில்2,157 பயனாளிகளுக்கு குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி மானியத்தின் கீழ் குடிநீர் வழங்கும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இருந்த போதிலும்தண்ணீர் தொட்டி கட்டுவதற்காகரூபா.700,000 மதிப்பீடுசெய்யப்பட்டிருந்த போதிலும்,ரூபா.1,542,175கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

------------------------------------------------------------------

4.1 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------------

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும்இடையில் 40% தொடக்கம் 60% வரையான முரணகள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------

கீழ்க் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு.

(ஆ) வருமான முகாமைத்துவம்.

(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு